**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.121/2025 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-8/PW- 4 <br> Name : சுகன்யா <br> (உதவி ஆய்வாளர்) <br> Father's/Husband's Name : நந்தகுமார் <br><br> Nationality : Indian | Village:கும்பகோணம் <br> Age :30 <br> Taluk : கும்பகோணம் <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 14.07.2026**

**எதிரி ஆஜர்.**

நான் தற்போது திருவிடைமருதூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவருடன் நான் சேர்ந்து பணிபுரிந்து வந்ததால் அவருடைய கையெழுத்து கையொப்பம் எழுத்து நடை எனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும் வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில் கொண்டு இந்த வழக்கின் தன்மை கருதி ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.06.2021ம் தேதி உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அன்பு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில்இருந்ம அசா1 சம்சுதின் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்த அன்றைய தினம் 21.30 மணிக்கு நிலைய குற்ற எண்.687/2021 சட்ட பிாிவுகள் 294(பி), 324, 506(2) இதச பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். **(புகார் வாக்குமூலம் அசாஆ 2 ஆகும்). (முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகும்).** பின்பு வழக்கை உதவி

ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 13.06.2021 காலை 6 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுதன், நிதிஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். ( **பார்வை மகசர் அசாஆ 4 மற்றும் மாதிரிவரைப்படம் அசாஆ 5 ஆகும்).** பின்பு பார்வை மகசர் சாட்சிகள் சுதன், நிதிஷ்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவ சாட்சிகள் ஹாஜாமைதின், ஹக்கிம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு கும்பகோணம் அன்பு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அசா1 சம்சுதின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் எதிரியை 13.06.2021 அன்று பகல் 12 மணிக்கு திருவிசநல்லூர் பஸ் ஸ்டாப் அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு காயம்பட்ட அசா1 க்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அன்பு மருத்துவமனை மருத்துவர் விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். மேற்படி மருத்துவர் காயம்பட்ட அசா1 க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்றளித்துள்ளார். **(காயச்சான்றிதழ் அசாஆ 6 ஆகும்).** இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது 294(பி),324,506(2) இதச பிரிவுகள் படி 26.06.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம்

இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம் (A. அப்துல்ரஹ்மான்)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.121/2025 <br> Sessions : <br> Deposition of Witness for : LW–3/PW– 3 <br> Name : ஹக்கிம் <br> Father's/Husband's Name : சம்சுதின் <br><br> Nationality : Indian | Village:வேப்பத்தூர் <br> Age :36 <br> Taluk : <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 14.07.2026**

சாட்சியை சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா வேப்பத்தூர் வாணிய தெருவில் வசித்து வருகிறேன். நான் சாம்சங் கம்பெனியில் மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அப்பா. அவர் கொல்லம் பிள்ளையார்கோவிலில் மளிகை கடை மற்றும் பிரியாணி கடை நடத்தி வருகிறார், ஆஜர் எதிரியை தெரியும். என் அப்பா கடையின் வாடிக்கையாளர். சுமார் 05 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2021-ம் அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் எனது அப்பா அவருடைய கடையில் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது வெளியே ஒரே சத்தமாகவும் கூட்டமாகவும் இருந்தது என்றும் அவர் என்ன என்று வெளியே வந்து பார்த்தபோது யாரோ அவரை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும் அதில்

அவர் கீழே விழுந்துவிட்டதாகவும் அவரை பின்னால் இருந்து தள்ளியதாலும், அவர் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் வெளியில் வேலையில் இருந்த என்னிடம் போன் மூலமாக எனக்கு தகவல் சொன்னார். மற்ற விவரங்கள் எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை கேள்விபடவும் இல்லை. அசா1 ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் வாக்குமூலம் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 12.06.2021 ம் தேதி மாலை 6.30 மணியளவில் ஆஜர் எதிரி சந்தோஷ் என்பவர் என் அண்ணன் கடைக்கு வந்து முட்டை மற்றும் மிக்சர் வாங்கிக்கொண்டு என்னடா பொருட்களை எல்லாம் அதிக விலைக்கு விற்கிறாய் தேவடியா குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக திட்டி தன் கையில் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் அவரது இடது உள்ளங்கையில் கிழித்துவிட்டார் என்றும் எண் அப்பா சத்தம்போடவே அக்கம் பக்கத்தினர் ஓடி வரவும் ஆஜர் எதிரி கத்தியை காண்பித்து இன்னைக்கு தப்பித்துவிட்டார் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் தகவல் கேள்விபட்டு வந்த நானும் எனது சித்தப்பா ஹாஜாமைதினும் சேர்ந்து அவரை கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிக்கை பெற்று மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு விசாரணைக்கு வந்த திருவிடைமருதூர் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில்

போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

ஒப்பம் (A. அப்துல்ரஹ்மான்)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.121/2025 <br> Sessions : <br> Deposition of Witness for : LW–2/PW– 2 <br> Name : ஹாஜாமைதின் <br> Father's/Husband's Name : முகமதுகாசிம் <br> Nationality : Indian | Village:கல்யாணபுரம் <br> Age :53 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 14.07.2026**

சாட்சியை சாட்சியை திருவிடைமருதூர் தலைமை காவலர் திரு. வீரபாண்டியன் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா கல்யாணபுரம் மெயின்ரோட்டில் வசித்து வருகிறேன். நான் கல்யாணபுரத்தில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். அசா1 எனது அண்ணன். அவர் கொல்லம் பிள்ளையார்கோவிலில் மளிகை கடை மற்றும் பிரியாணி கடை நடத்தி வருகிறார், ஆஜர் எதிரியை தெரியும். என் அண்ணன் கடையின் வாடிக்கையாளர். சுமார் 05 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2021-ம் அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் எனது அண்ணன் அவருடைய கடையில் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது வெளியே ஒரே சத்தமாகவும் கூட்டமாகவும் இருந்தது என்றும் அவர் என்ன என்று வெளியே வந்து பார்த்தபோது யாரோ அவரை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள்

என்றும் அதில் அவர் கீழே விழுந்துவிட்டதாகவும் அவரை பின்னால் இருந்து தள்ளியதாலும், அவர் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள் எதற்கு தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் போன் மூலமாக எனக்கு தகவல் சொன்னார். மற்ற விவரங்கள் எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை கேள்விபடவும் இல்லை. அசா1 ஆஜர் எதிரி மீது கொடுத்த புகார் வாக்குமூலம் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 12.06.2021 ம் தேதி மாலை 6.30 மணியளவில் ஆஜர் எதிரி சந்தோஷ் என்பவர் என் அண்ணன் கடைக்கு வந்து முட்டை மற்றும் மிக்சர் வாங்கிக்கொண்டு என்னடா பொருட்களை எல்லாம் அதிக விலைக்கு விற்கிறாய் தேவடியா குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக திட்டி தன் கையில் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் அவரது இடது உள்ளங்கையில் கிழித்துவிட்டார் என்றும் எண் அண்ணன் சத்தம்போடவே அக்கம் பக்கத்தினர் ஓடி வரவும் ஆஜர் எதிரி கத்தியை காண்பித்து இன்னைக்கு தப்பித்துவிட்டார் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் தகவல் கேள்விபட்டு வந்த நானும் எனது அண்ணன் மகன் ஹக்கிமும் சேர்ந்து அவரை கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் முதல் உதவி சிகிக்கை பெற்று மேல் சிகிச்சைக்கு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு விசாரணைக்கு வந்த திருவிடைமருதூர் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன்

அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

ஒப்பம் (A. அப்துல்ரஹ்மான்)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.